முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 827

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.01.2022, திங்கட்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானபலம் கொண்ட தேசிகா போற்றி
ஞானபண்டிதன் என் சக்தியாக வாழும்
ஞானியே ஆறுமுக அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் மார்கழி மாதம் 19ம் நாள், 03.01.2022 திங்கட்கிழமை)
ஆற்றல் பட அரங்கன் அறமெனும் சக்தியே
ஆற்றலாக கொண்டு இயக்கிவர
3. வருகின்ற அரங்கன் தொடர்பை
வையகத்தில் தொடர்ந்து ஏற்கும் மக்களெல்லாம்
தருகின்ற சக்தியே தர்மசக்தியாகப்பெருகி
தரணியில் உயர் நிலை பெறுவர்
4. நிலைபட அரங்கன் ஞானத்தொண்டு
நிலவுலகை மாற்றம் செய்ய இருக்க
பிழையற அரங்கன் தொடர்பில் வரும் மக்களெல்லாம்
பிசகின்றி ஞானிகள் ஆவரப்பா
5. அப்பனே அரங்கன் தர்ம பாதைவழி
அகிலமே மாற்றங்கண்டு வர இருக்க
பெருமைபட அரங்கஞானி தொடர்பில்
புகலுவேன் தொடர்ந்து வரும் மக்களுக்கு
6. இடர்கள் அகலும் ஏவல் ஓமல்
எதிர்ப்பு வஞ்சமில்லாத வாழ்வும்
வாழ்வினில் அருளாசிபடவே
வையகம் பெருமாற்றம் காணும்
7. தருகின்ற அரங்கன் தொடர்பே
தரணியில் தீட்சைவடிவாக உலகோர்க்கு
அருமருந்தாகி இறங்கி நின்று அற்புதம் நிகழ்த்தும்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–